தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2036 ஏப்பிரல் 2005

T-UN-677



## தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளுக்கு தமிழ்ப் புத்தாண்டு
## 50 % சிறப்புத் தள்ளுபடி விற்பனை

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு பதிப்புத்துறையின் வெளியீடுகளுக்கு 50 சதவீத தள்ளுபடி விலையில் விற்பனை தொடக்க விழா, 15.04.2005 அன்று மாலை 4.00 மணியளவில் அரண்மனை வளாகத்திலுள்ள கருத்தரங்கு அறையில் நடைபெற்றது. இவ்விழாவினை ஆட்சிக்குழு உறுப்பினரும், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினருமான முனைவர் சே.பிரேமா அவர்கள் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

பதிப்புத்துறை இயக்குநர் (பொ) முனைவர் ஆ.இராமநாதன் அவர்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நல்கினார். ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் கு.அண்ணாதுரை மற்றும் கரந்தை தமிழவேள் உமாமகேசுவரனார் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் இரா.இளமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர் முனைவர் சே.பிரேமா அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இதுவரை 350க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது என்றும் 2004ஆம் ஆண்டில் மட்டும் மறுபதிப்பு நூல்களையும் சேர்த்து 24 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் சென்ற ஆண்டைக் காட்டிலும் நடப்பு ஆண்டில் அதிக நூல்கள் வெளியிட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது என்றும் கூறினார். மேலும் அவர் கூறிய செய்திகள் வருமாறு:

தற்பொழுது வாழ்வியல் களஞ்சியத்தின் 14, 15ஆவது தொகுதிகள், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத்தின் 4,5,6 ஆகிய தொகுதிகள், அறிவியல் களஞ்சியத்தின் 15,16,17ஆவது தொகுதிகள், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் (தொகுதி 7), நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை, எளிய மருத்துவ முறைகள் உள்ளிட்ட பல புதிய நூல்களின் அச்சுப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

2004ஆம் ஆண்டில் மட்டும் உரூ.24.14 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த தமிழ்ப் புத்தாண்டையொட்டி நடைபெற்ற விற்பனைக் கண்காட்சியின் மூலம் மட்டும் உரூ.5 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் எழுதிய பழவேற்காடு கி.பி.1816-இல் என்ற நூல் 2004ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதைப் போன்று முனைவர் ச.இராசேந்திரன் எழுதிய தமிழில் சொல்லாக்கம் , முனைவர் சோ.ந.கந்தசாமி எழுதிய தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (தொகுதி 2) முனைவர் து.சீனிச்சாமி எழுதிய தமிழ் நாவல்களில் உளச் சித்திரிப்பு போன்ற முக்கியமான நூல்கள் 2004ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

அச்சகத் துணைப்பணி மேலாளர் திரு பொன். கோதண்டராமன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா நிறைவுற்றது.

-முனைவர் ஆ.இராமநாதன், இயக்குநர் (பொ), பதிப்புத்துறை

தமிழ்ப் புத்தாண்டையொட்டி, 15.04.2005 முதல் 31.05.2005 முடிய நடைபெற்ற சிறப்புத் தள்ளுபடி விற்பனையில், இதுவரை இல்லாத அளவு உரூ.7,70,413/- மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த விற்பனை 2003இல் ரூ.2,67,983/- ஆகவும், 2004இல் ரூ.5,02,895/- ஆகவும் இருந்தது.

27.04.2005

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறக்கட்டளை இசைப்போட்டி

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | முனைவர் இ.அங்கயற்கண்ணி, தலைவர், இசைத்துறை |
| தலைமையுரை | : | முனைவர் மரு.சே.பிரேமா, துணைவேந்தர் பொறுப்புக்குழு |
| வாழ்த்துரை | : | முனைவர் மு.இராமசுவாமி, தலைவர், கலைப்புலம் |
| சிலப்பதிகாரப் பாடல்கள் இசை நிகழ்ச்சி | : | செல்வி ர.அனுஷா, ஆசிரியர் இசைப்பயிற்சி கல்லூரி மியூசிக் அகாடமி, சென்னை. |

- மக்கள் தொடர்பு அலுவலர்

# தமிழ்ப் பயிற்சி வகுப்பு



தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு வனத்துறையும் இணைந்து 2005 ஏப்ரல் 14 முதல் ஏப்ரல் 27 வரை 14 நாட்கள் இந்திய தகுதிகாண் பருவ வனப்பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல், மொழிபெயர்ப்பு, கட்டுரை எழுதுதல், கையெழுத்துப் பயிற்சி, வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சியின்போது ஒரு வனப்பணி அலுவலருக்கு நமது பல்கலைக்கழகத்தின் 5 பேராசிரியர்களைக் கொண்டு சிறப்புத் தமிழ்ப் பயிற்சிகளையும், துறையின் கணிப்பொறி மொழிக்கூடத்தில் தமிழ் கற்பித்தலுக்கான மென்தகட்டினைப் (செந்தமிழ் சிடி) பயன்படுத்தியும் 72 மணிநேரம் தமிழ் கற்பிக்கப்பட்டது. மேலும் தொடக்க நாளான 14.04.2005 அன்று முன்னறித் தேர்வும் (Pre-Test) இறுதி நாளான 27.04.2005 அன்று திறமைத் தேர்வும் (Post-Test) நடத்தப்பட்டன. முன்னறித் தேர்வின் அடிப்படையில் அலுவலருக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. திறமைத் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பயிற்சியின் பலனாக சரியான பதில்களை நல்ல முறையில் தந்து தேர்ச்சி பெற்றுள்ளார்.

இப்பயிற்சி வகுப்பில் திரு இராகேஷ்குமார் ஜெகானியா, இ.வ.ப. வனப் பாதுகாவலர் (பயிற்சி), காஞ்சிபுரம் மாவட்டம், கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.

இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் ஆ.கார்த்திகேயன், துறைத்தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, முனைவர் ச.இராதாகிருட்டிணன், துறைத்தலைவர், மொழியியல்துறை, முனைவர் எச்.சித்திரபுத்திரன், துறைத்தலைவர், அகராதியியல் துறை ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.

–முனைவர் வே.சா.அருள்ராஜ், ,இந்திய மொழிகள் பள்ளி



## பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறையில் பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கம் 28.04.2005 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மொழிபெயர்ப்புத்துறைத் தலைவர் முனைவர் ச.இராதாகிருட்டிணன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறைத் தலைவரும், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினருமான மருத்துவர் முனைவர் சே.பிரேமா அவர்கள் இக்கருத்தரங்கிற்குத் தலைமையேற்றார். அவர் தமது தலைமையுரையில் பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் பல புதிய சிந்தனைகள் நிறைந்துள்ளன என்றார். அவருடைய கவிதைகள் சமூகச் சிந்தனையுள்ளவை. தான் சிறு வயதில் பள்ளியில் படிக்கும்போது பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டபோது பாரதிதாசன் கவிதைகள் தனக்கு அறிமுகமாகியதையும் சுவைபடக் கூறினார். பெண் கல்வியைப்பற்றி பாரதிதாசன் இயற்றிய கவிதைகளைச் சுட்டிக் காட்டினார். சாதாரண மக்களிடம் பாரதிதாசன் கவிதைகள் சென்றடைந்ததற்கு அவருடைய கவிதைகள் திரைப்படப் பாடல்களாக மாறியதும் ஒரு காரணமென்றார்.

கருத்தரங்கத் தொடக்க உரையாற்றிய சென்னைப் பல்கலைக்கழக அண்ணா பொது வாழ்வியல் மையப் பேராசிரியர் முனைவர் கோ.கிருட்டிணமூர்த்தி அவர்கள், பாரதிதாசன் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளைச் சுவைபட எடுத்துக்காட்டினார். பாரதிதாசனின் பிறந்த நாள் பற்றிய குழப்பங்கள் அவர் வாழ்ந்தபோதே இருந்தன என்றார். அவரே இதுகுறித்து கைப்பட எழுதிய கடிதம் ஒன்று புதுவையில் அவருடைய நினைவில்லத்தில் இருக்கிறது என்றார். பாரதிதாசனுடைய கவிதைகள் மக்கள் மத்தியில் வரவேற்கப்பட்டதற்குக் காரணம் அவருடைய கவிதைகள் திரைப்படப் பாடல்களானது மட்டுமல்ல அவருடைய கவிதைகளில் இருந்த எளிமை, இனிமை, நடை, சமூகப் புரட்சிக் கருத்துக்கள் ஆகியனவும் ஆகும் என்றார். பாண்டியன் பரிசு நாடகத்தைத் திரைப்படமாக எடுப்பதற்குப் பாரதிதாசன் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும் அதன் விளைவும் அவர் வாழ்வில் பெரிதும் மாற்றத்தைக் கொண்டுவந்தன என்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன், இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் தா.ஈசுவரப்பிள்ளை, நாகர்கோவில் இந்து கல்லூரியின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் திரு எம்.சுப்பிரமணியப்பிள்ளை ஆகியோர் கருத்தரங்க அமர்வுத் தலைவர்களாகப் பங்கேற்றனர். புதுவைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பூண்டி திரு புட்பம் கல்லூரி, அதிராம்பட்டிணம் காதர் மொகிதீன் கல்லூரி, தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்று கட்டுரைகளைப் படித்தனர். மொழிபெயர்ப்புத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் திரு பி.ஆர்.வீரமணி நன்றி கூறினார்.

– முனைவர் ச.இராதாகிருட்டிணன், மொழிபெயர்ப்புத்துறை



## டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

இந்திய மொழிகள் பள்ளியின் சார்பில் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு 06.04.2005 அன்று மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இந்திய மொழிகள் பள்ளி ஆய்வு மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் சொற்பொழிவு நிகழ்ச்சி தொடங்கியது. சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் வரவேற்றுப் பேசினார். அவர்தம் உரையில் இவ் அறக்கட்டளை நிறுவியதன் நோக்கத்தினையும் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பினையும் அதனைத் தொடர்ந்து அவர் ஆற்றிய கல்விப் பணியினையும் சுருக்கமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து இந்நிகழ்ச்சிக்கு தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினருமாகிய மருத்துவர் முனைவர் பேரா. சே. பிரேமா அவர்கள் தலைமைதாங்கி தலைமையுரை ஆற்றினார்கள். அவர்தம் தலைமையுரையில் இந்திய மொழிகளில் இராமாயணம் பற்றிய வரலாற்றினை சித்த மருத்துவத்தோடு தொடர்புப்படுத்திக் கூறினார். மேலும் இராமாயணத்தில் இராமன் சிறந்த கணவனாகவும், சீதை ஒரு சிறந்த மனைவியாகவும், இலக்குவன் ஒரு சிறந்த சகோதரனாகவும் குறிப்பிட்டுள்ளதையும் இராவணன் ஒரு விரும்பத்தகாத பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளதையும் தம் உரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அறக்கட்டளைச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிய திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் சண்முக செல்வகணபதி அவர்கள் திராவிட மொழி இலக்கியங்களில் இராமாயணம் என்னும் பொருண்மையில் இந்திய மொழிகளில் அதிலும் குறிப்பாகத் தெலுங்கு, தமிழ், வடமொழி, மலையாளம், கன்னடம் போன்ற இந்திய மொழி இலக்கியங்களில் இராமகாவியம் பற்றி விரிவாகக் கூறினார்கள்.

அவர்தம் பொழிவில் தமிழுக்குக் கதி என்பதில் 'க' என்பது கம்பரும் 'தி' என்பது திருவள்ளுவரும் எனக் கூறியது இங்கு குறிப்பிடத்தகுந்தது. தெலுங்கில் ரங்கநாத இராமாயணம், தமிழில் கம்பராமாயணம், வடமொழியில் வால்மீகி இராமாயணம், கன்னடத்தில் துளசிதாசர் இராமாயணம், மலையாளத்தில் வடமொழியைத் தழுவி எழுத்தச்சனால் எழுதப்பட்ட இராமாயணம் ஆகிய அனைத்துமேஇராமசரிதத்தையே கூறுவதாகக் குறிப்பிட்டார்.

கன்னட இராமாயணம் ஜைன சமயத்தைத் தழுவி படைக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். திராவிட மொழிகளுள் தமிழ் மொழியில் படைக்கப்பட்ட கம்பராமாயணத்திற்கு தனித்துவம் உள்ளதை வெகு அழகாக உதாரணங்களோடு தமது உரையில் எடுத்துக்கூறி தனது சிறப்புச் சொற்பொழிவினை நிறைவு செய்தார்.

இறுதியில் நிகழ்ச்சிக்கு வந்திருந்து சிறப்பித்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் பேரா.முனைவர் இராம. சுந்தரம், முனைவர் கி.அரங்கன் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆய்வு உதவியாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், ஆய்வாளர்கள் (முனைவர் பட்ட மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்கள்), முதுகலைப்பட்ட மாணவ மாணவிகள், நகரப்பிரமுகர்கள், புகைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினர் அனைவருக்கும் இந்திய மொழிகள் பள்ளியின் ஆய்வு உதவியாளர் முனைவர் இரா.முரளிதரன் அவர்கள் நன்றியினைத் தெரிவித்தார். நிகழ்ச்சி நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

–முனைவர் வே.சா.அருள்ராஜ், இந்திய மொழிகள் பள்ளி

---

## மார்ச் '05 இல்...

## நடைபெற்ற நிகழ்வுகள்

02.03.2005 நாட்டுப்புறவியல் புத்தொளிப் பயிற்சி தொடக்க விழா
- தலைமை: முனைவர் சே.பிரேமா, துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர், தபக
- சிறப்புரை: பேரா.கே.ஜி.சேஷாத்திரி, சாஸ்த்ரா பல்கலைக்கழகம்
- நன்றியுரை: முனைவர் சி.சுந்தரேசன், ஆய்வு உதவியாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

07.03.2005 அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை –புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா
- தலைமை:முனைவர் க.பாஸ்கரன்
- சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை: முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி, ஆட்சிக்குழு உறுப்பினர் & இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

15.03.2005 அன்னை அஞ்சுகம் தஞ்சை முத்துவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு
- தலைமை: முனைவர் மரு.சே.பிரேமா, துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர், தபக
- முதல் சொற்பொழிவு: முனைவர் அ.தட்சணாமூர்த்தி, முன்னை முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை
- 2ஆம் சொற்பொழிவு: முனைவர் பா.மதிவாணன், இணைப்பேராசிரியர், கரந்தைக் கல்லூரி

15.03.2005 முனைவர் மேஜர் கதிர்மகாதேவன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
- தலைமை: முனைவர் மரு.சே.பிரேமா அவர்கள், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர், தபக
- சொற்பொழிவாளர்: முனைவர் சண்முகசெல்வகணபதி, முதல்வர், அரசர் கல்லூரி, திருவையாறு

23.03.2005 நாட்டுப்புறவியல் துறை புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா
- தலைமை: முனைவர் மரு.சே.பிரேமா அவர்கள், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்
- மையக்கருத்துரை, சான்றிதழ்கள் வழங்குதல்: திரு க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப. இயக்குநர், தென்னகப்பண்பாட்டு மையம்

28.03.2005 முனைவர் ஏ.பி.ஆண்ட்ரூஸ்குட்டி அறக்கட்டளைச் சொற்பொழிவு
- தலைமை: முனைவர் பஞ்சன்னன் முகந்தி, பேரா. ஹைதராபாத் பல்கலைக்கழகம்
- சிறப்புரை: முனைவர் கி.அரங்கன், பேராசிரியர் (ஓய்வு) தபக

29.03.2005 நீலம் யக்ஞ நாராயண அறக்கட்டளைச் சொற்பொழிவு
- தலைமை: முனைவர் மரு.சே.பிரேமா அவர்கள், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்
- சொற்பொழிவு: திரு ப.பெருமாள், நூலகக் காப்பாளர், சரஸ்வதி மகால் நூலகம்

–முனைவர் அ.வள்ளிநாயகம், மக்கள் தொடர்பு அலுவலர்

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

## உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை அலுவலர்களுக்கான சிறப்பு கணிப்பொறி பயிற்சி



தமிழக அரசின் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அதன் பணிகளைக் கணிப்பொறியாக்கம் செய்ய முனைந்துள்ளது. இத்துறையின் அலுவலர்களுக்கு இதற்கான சிறப்பு கணிப்பொறிப் பயிற்சியைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வழங்குமாறு இத்துறையின் இயக்குநர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ஒரு வாரகால முழுநேரப் பயிற்சி வகுப்புகள் மூன்று நடத்தப்பட்டன. முதல் பயிற்சி வகுப்பு 23.03.2005 முதல் 27.03.2005 முடியவும் இரண்டாம் பயிற்சி வகுப்பு 05.04.05 முதல் 09.04.05 முடியவும் மூன்றாம் பயிற்சி வகுப்பு 18.04.05 முதல் 22.04.05 முடியவும் நடைபெற்றன.

இப்பயிற்சி வகுப்பில் தஞ்சை, திருவாரூர், கும்பகோணம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் பணிபுரியும் அலுவலர்கள் சுமார் 60 பேர் பங்கேற்றனர். இப்பயிற்சி வகுப்பில் கணிப்பொறி அறிமுகம், விண்டோஸ்-98, எம்.எஸ்.வேர்டு, எம்.எஸ்.எக்சல், இணையம் மற்றும் மின்-அஞ்சல் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்பட்டன. விரிவுரை வகுப்புகள், செயலாக்கம் மற்றும் செயல்முறைப் பயிற்சிகள் தரப்பட்டன. இப்பயிற்சி மிகுந்த பயனுள்ளதாக அமைந்ததாகவும் தங்கள் துறை சார்ந்த பணிகளைக் கணிப்பொறி வழி மேற்கொள்ள உதவுமெனவும் பங்கேற்பாளர்கள் எதிரொலி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பின் தொடக்க மற்றும் நிறைவு நாட்களில் இத்துறையின் திருச்சி மண்டலத் துணை இயக்குநர் திரு இரா.உறரிஉறரன் அவர்கள் பங்கேற்று பயிற்சியாளர்களை ஊக்குவித்தார். இப்பணியை மேற்கொண்டு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நன்றி கூறினார். இப்பயிற்சி வகுப்புகள் கணிப்பொறி அறிவியல் துறைத்தலைவர் திரு ச.பாஸ்கரன் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றன. திரு பி.சித்தார்த்தன், கேள்வி-காட்சி மைய தொழில்நுட்பாளர்கள் திரு ப.சேகர், திரு இரா.செல்வம் மற்றும் ஒளியச்சுப்பிரிவு பணியாளர்கள் திரு நா.இராமக்கிருட்டிணன், திரு த.இராசராசன் ஆகியோர் செயல்விளக்கம் தருபவர்களாகப் பணியாற்றிப் பயிற்றுனர்களின் பாராட்டுப் பெற்றனர்.

–ச.பாஸ்கரன், துறைத்தலைவர், கணிப்பொறி அறிவியல் துறை

## தமிழக அரசு மொழிச் சிறுபான்மை அலுவலர்களுக்கான தமிழ்ப் பயிற்சி வகுப்பு

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு நிர்வாக சீர்திருத்தத்துறை (பயிற்சி-2)யும் இணைந்து 2005 ஏப்ரல் 28 முதல் மே11 வரை 14 நாட்கள் தமிழக அரசு மொழிச் சிறுபான்மை அலுவலர்களுக்கென சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினைச் சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள், இலக்கணம், உரையாடல், மொழிபெயர்ப்பு, கட்டுரை போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் மூன்று தமிழக அரசு மொழிச் சிறுபான்மை அலுவலர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். தொடக்க நாளான 28.04.2005 அன்று முன்னறித் தேர்வும் (Pre-Test) இறுதி நாளான 11.05.2005 அன்று திறமைத் தேர்வும் (Post-Test) நடத்தப்பட்டன. முன்னறிவுத் தேர்வின் அடிப்படையில் மூன்று அலுவலர்களுக்கும் வகுப்புகள் நடத்தப்பட்டன. திறமைத் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களைப் பயிற்சியாளர்கள் எழுதித் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் திருமதி மைத்ரேயி சர்மா (வரவேற்பாளர், தமிழ்நாடு இல்லம், புதுதில்லி), திரு பி.சந்திரசேகரன் (இளநிலை உதவியாளர், பொதுப் பணித்துறை, திருநெல்வேலி), திருமதி முனைவர் கே.வி.கனகலட்சுமி (உதவி அறுவை சிகிச்சை நிபுணர், அரசு தலைமைமருத்துவமனை, கடலூர்) ஆகிய அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத் தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியர்கள் முனைவர் கு.ஜீன் லாரன்ஸ், முனைவர் கே.சுப்பையா பிள்ளை மற்றும் முனைவர் டி.ரெங்கநாதன் ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.

–முனைவர் வே.சா.அருள்ராஜ், இந்திய மொழிகள் பள்ளி



பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001.